# வாழ்நாள் கல்விக்கு நிதியாதரவு தரும் விதத்தை சிங்கப்பூர் மறுஆய்வு செய்யவிருக்கிறது

***Seithi Mediacorp, 5 January 2023***

சிங்கப்பூர் வாழ்நாள் கல்விக்கு நிதியாதரவு வழங்கும் விதத்தை மறுஆய்வு செய்ய எண்ணுகிறது.

பாதியில் வேறு வேலைக்குச் செல்ல விரும்புவோருக்கு மேலும் கைகொடுக்கும் வகையில் அந்த மாற்றம் அமையலாம்.

வேலை மாறுவோர் தொடர்ந்து போட்டித்தன்மையோடு இருப்பதை உறுதிசெய்யும் வகையில் அவர்கள் மேற்கொள்ளும் படிப்பு இருக்கவேண்டும்.

அவர்களின் துறை சார்ந்து அவர்கள் தொடர்ந்து ஆற்றலோடு இருப்பதும் முக்கியம்.

அணுகுமுறையில் மாற்றம் தேவை என்று கல்வி அமைச்சர் சான் சுன் சிங் (Chan Chun Sing) கூறினார்.

அவர் கொள்கை ஆய்வுக் கழகத்தின் மாநாட்டில் பேசினார்.

நிச்சயமற்ற, சவால்மிக்க உலகில் சிங்கப்பூரர்கள் வெற்றிபெற வேண்டுமானால் அணுகுமுறையில் மாற்றம் அவசியம் என்றார் அமைச்சர்.